உ

சிவமயம்.

அகிலாண்டநாயகி துணை.

ஜம்புகேசுவரம் என்னும்

திருவானைக்கா

மகாகும்பாபிடேகச்சிறப்பு.

இஃது

ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

குரு-சுப்பிரமணிய ஐயரால்

இயற்றப்பெற்றது.

ஸ்ரீரங்கம்:

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.

1908.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்கா

மகாகும்பாபிடேகச்சிறப்பு.

காப்பு.

நேரிசை வெண்பா.

அம்பா ளகிலாண்ட நாயகியோ டைம்முகன்கொள்
கும்பா பிடேகவளங் கூறுதற்குத்—தம்பாலிற்
றஞ்சமெனச் சார்ந்தவர்க்குத் தண்ணருள்செய் தந்திமுகர்
கஞ்சமலர்த் தாளிரண்டுங் காப்பு.

நூல்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மணிபூத்த மார்பகத்துத் திருமாதைக்
கொண்டுவளர் மாயோன் வைப்புங்

கணிபூத்த பொருப்பகமுந் தரைவளத்தின்
வளர்செந்நெல் கன்னல் காட்டுங்

திணிபூத்த மருதமுநன் னெய்தலுந்தத்
தமக்கேற்பத் திகழ்வளத்தின்
அணிபூத்த சோழவள நாடென்றோர்
நாடுண்டிவ் வவனி யின்கண். 1.

யானையொடு முத்துதவு வார்களினும்
பசிக்கன்ன மிடுவார் முந்நீர்த்
தானையுல கிடைமிகுநற் பலன்பெறுவர்
சான்றோருந் தழைப்பர் சோற்று
லானதினிவ் வேழமுதற் பொருள்கண்மிகு
மலைநாட்டை யாதியாக்கொள்
ஏனையமுந் நாட்டினிலிச் சோறுடைய
சோணாடே யேற்றஞ் சாலும். 2.

இத்தகுநற் சிறப்பினன்றோ மலைதொண்டை
தென்னாடென் றியம்பு நாட்டிற்
சித்திரஞ்சேர் தளிகள்சில சிலவேவகொண்
டவற்றினிடைத் திகழ்ந்துவாழும்
உத்தமனுஞ் சிவபெருமான் றன்னொருபான்
மேவிவள ருமைமாதோடு
மெத்துபுகழ்ச் சோணாட்டிற் பலதளிகொண்
டாங்காங்கு மேவுமாறே. 3,

இவ்வாறு சிவனமரும் பலபதிக்கு
ளொருபதியிவ் வெழிற்சோ ணாட்டி
லெவ்வாறு மொவ்வாவோ ராறேயீ
ராருய்க்தன் னிருபாற் பாய
முவ்வாருய் விண்ணினின்று காலாற்றை
முடித்தவன்வாழ் முதன்மைக்கேற்ப
அவ்வாறு தானுமிந்த வையாற்றை
யணிந்ததெனு மழகிற் ருமால். 4.

தருவானைக் கலந்ததனைத் தாங்கிவளர்
தம்பநிகர் தடங்காச் சூழ்ந்த
திருவானைக்காவாமித் திருப்பதிற்
றேவனுயர் தேவியே முன்
பெருவானை முதலாக்கொ ளைம்பூதத்
தொன்ருகப் பிறங்குநீராற்
கருவானை யுயிர்கடொழு தயக்குறிசெய்
திறைஞ்சவதிற் கலந்துவாழும். 5.

சம்புமுனி முதலாய முனிவர்களுஞ்
சுரர்களுமித் தலத்தைச் சார்ந்தே
அம்பிகையோ டரற்போற்றி ஞானம்பெற்
றுய்ந்தவர்க ளளவிலாதார்

வெம்புகரி யாதியபல் லஃறிணையு
மிவணடைந்து மிளிர்ஞானத்தால்
நம்பனடி யடைந்தவெனின் ஞானதல
மிதன்பெருமை நவிலற் பாற்றே. 6.

கண்டுரைத்த தலத்தினிடைச் சிவனுமையோ
டமர்கோயிலியற்றிப் பன்னா
ளுண்டுசென்ற வதனாற்சி திலமாகி
யுருக்குலைந்த தகத்தினுன்னி
நீண்டுயர்கோ புரம்புரிசை மண்டபங்கள்
பலகொண்டு நிலவுமஃதை
மீண்டுமுயர் திருப்பணிசெய் தெழின்மருவப்
புதுக்கிமிகு விளக்கமாக. 7.

ஞானதல மாதலினித் தலமதனுக்
கேற்பவுயர் ஞானத்தால்விண்
மேனகுமொண் பானுவென வுலகுக்கோர்
குருவாகி விளக்கங் கொண்டு
தேனமர்பூஞ் சோலைசுலாஞ் சிங்கேரி
நகரின்கட் சேர்ந்து வாழ்மே
லானபுகழ் கொளுஞ்சங்க ராசாரி சுவாமிகளை
யழைத்தன் னோர்முன். 8.

பண்கொண்ட நால்வேதத் தட னாறு
சாத்திரமும் பரிந்துகற்றுக்
கண்கொண்ட பூதலத்தக் கல்வியைத்தம்
மொழுக்கத்துங் காட்டாநின்ற
தண்கொண்ட குணமுறுப்பூ சுரர்பலரைத்
தருவித்துத் தகுமன்னோராற்
றிண்கொண்ட கடத்தாபனச் செயலாதிய
செயல்கடிருந்தச் செய்தே. 9.

நாலாவ தாம்யுகத்தி லேயாயி ரத்தினிலோர்
நாலொடைந்தை
மேலாகச் சேர்த்தெண்கொள் பிலவங்க
வருடத்தின் மிளிர்மாதத் திங்கள்
தோலாநற் குணங்கொண்ட தெய்தியது
நான்காகத் துலங்கும் பொன்னாட்
பாலாரு நிறப்பூர்வ பக்கத்துப்
பஞ்சமியிற் பகர்நற்றுனம். 10.

எல்லோ ருதியகோள்க ளமைதர
வுத்திரட்டாதி யெழிஞண்மீன
நல்லோரைதனின் முறையாற் கும்பாபிடேகத்தை
நடப்பித்தான்மேற்

செல்லோடி யயர்மாடக் காணுங்கோத்தானிற்
சிவன்ருள்போற்றும்
வல்லோனவ் விளைபாத்தங் குடிக்கோயிற்
சிதம்பரப்பேர் வணிகன்ருனே. 11.

சொற்றவிது காரணத்தாற் புண்ணியமும்
புகழுங்கொள் சுகுணனுகுங்
கற்றவர்கண் மனங்களிக்கக் கனகமழை
பொழியுமிவ்வண் கையான் றன்னை
யற்றமில் புத்திரனுகப் பெறராமசாமி
வள்ள லங்நாள் செய்த
நற்றவந்தா னென்னேயோ வணிகர்குல
தருமமிதே னவில்வதென்னே. 12.

சீர்கொண்ட திருக்கோயிற் பணியழகைச்
செப்புங்காற் சிலந்தியென்னும்
பேர்கொண்ட புழுத்தான்செய் கோயிலினு
நனிசிறப்பப் பிறிதோர்சன்மத்
தேர்கொண்ட சோழனுய்ச் செய்கோயில்
போலதினு மெழிலாத்தானே
நார்கொண்ட வுளத்திங்ஙன் பிறப்பெய்திச்
செய்ததென நாட்டலாமே. 13.

இப்படிச்சொல் லுவதன்றித் திருப்பணியி
னுட்பிரிவை யெல்லாங்கண்டு
செப்பிடவாயிர நாக்கொள் சேடனுக்குந்
திறனின்றாற் சிறுவை யொன்று
லெப்படிமற்றோருரைப்ப தபிடேகச்
சிறப்பு மற்றே யெனினுந் தன்ன
மப்படியே தொகுத்துரைப்ப வவாவினனுதலி
னதனை யறையக்கேண்மின். 14.

சகந்தனில்வாழ் மாந்தரன்றிக் கும்பாபிடேகத்தைத்
தரிசித்துய்வான்
திகந்தமுறுங் காவலரோ டமரர்களும்
வந்தனரிச் செய்தியன்னோர்க்
குகந்துரைத்தார் யாவரெனி னிவண்முழங்கு
மறைமுழக்கே யுரைக்காதோபோய்ச்
சுகந்தமுறு மகப்புகையுஞ் சூழ்ந்தழைக்கி
னதனெடுப்பின் சொல்வதென்னே. 15.

இங்கணறு சுவைகொளூமு ணுண்டவர்க
ளமிழ்திதனுக் கிணையன் றென்பார்
இங்கணுயர் கீதங் கேட்டவர்களிது
தும்புருவி னிசையோ வென்பார்

இங்கணெளிர் கண்காட்சி கண்டவர்கள்
சிவலோக மிதுவே யென்பார்
இங்கணனிகழ்மணத்தை முரன்றவர் மூக்குறு
பயனிங்கிது நன்றென்பார். 16.

பண்டோயு மொழியுமைக்கும் பரமனுக்கு
மபிடேகம் பண்ணுங் காட்சி
கண்டோர்களுக்குளிலே கடவுளெனு
நாத்திகருங் கருத்துட்பத்தி
கொண்டோர்களாய்வணங்கி யுண்டுண்டு
தெய்வமெனக் கூறினுன்றே
ரெண்டோயு மவணன்று விளங்கியதை
விகமெம்மா லியம்பற்பாற்றே. 17.

மன்றினடந்தரும் பதத்த னன்றிரவில்
வீதிவலம் வரும்பதத்தி
லொன்றியபல் லவிட்டினங்கள் விண்ணடைந்து
வெடித்தவணின் றுகும்புலிங்கந்
துன்றியவானவர் பொழியும் பூக்களொடு
கலந்தவையாய்த் தோன்று முன்னுள்
வன்றிறல் கொள்குரக்கினஞ்சேர்ந் தரக்கனெற்றர்
குரக்கினமாய் மதிப்புற்றுற்போல். 18.

திங்கண்முடிச் சங்கரனு மகிலாண்ட
நாயகியாந் தேவியாருந்
தங்களுயர் குமரர்களா மிருவருஞ்
சண்டேசருடன் றம்மைச்சார
மங்களமாய் விடையேறி வீதிவலம்
வருங்கோல மகிழ்ந்துகண்ட
அங்கணுடையார்களுக் கெந்நாளுமெங்கு
மக்கோல மவிருந்தானே. 19.

நாவலடி யமர்சம்பு நாதனூர் வாழ்க
வந்த நாதர்க்கோர்பான்
மேவலுறு மகிலாண்டத் தாய்வாழ்க
விங்கிவரை வேதாந்தத்தி
லாவலுடனறிந்திடு மந்தணர் வாழ்க
வவர்விரும்பு மாக்கள் வாழ்க
பூவலய மனைத்தொடு மிச்சிவன்முதலோர்ப்
பணிவணிகர் பொலிந்து வாழ்க. 20